# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 10 | தமிழ் இலக்கிய நயம் | நேரம்: 3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................................

மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடம்

**கவனிக்க:**

- 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமாக விடை எழுதுக.
- வினாத்தாள் 1 இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதி வேறாகக் கையளிக்கவும்.

### பகுதி - I

**01. I தொடக்கம் V வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

I. வேல் உண்கண் வேய்த்தோ ளவட்கு

அ) “உண்கண்” என்பதன் பொருள் என்ன?

..............................................................................................

ஆ) வேய்த்தோள் என்பதில் பயின்று வந்துள்ள அணியாது?

..............................................................................................

II. கான் ஒருங்குபடர, அக்கார் வரை
மீன் நெருங்கிய வானகம்

அ) “மீன் நெருங்கிய வானகம்” என்ற அடியின் சிறப்பினை விளக்குக.

..............................................................................................

ஆ) இங்கு “கான்” என்பதன் பொருள் என்ன?

..............................................................................................

III. ஆச்சியும் அப்புவும் வாழவேண்டும்
அம்மானும் மாமியும் வாழ வேண்டும்

அ) அம்மான் என்ற உறவுமுறைக்குரியவர் யார்?

..............................................................................................

ஆ) இவ்வாறு வாழ்த்தியவர் யார்?

..............................................................................................

IV. “கிடாரிக் கன்றுக்குட்டியாக இருந்தாலும் பரவாயில்லை”

அ) “கிடாரிக் கன்றுக்குட்டி” என்று அழைக்கப்படுவது எது?

..............................................................................................



kalvi.lk

ஆ) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?

…………………………………………………………………………………………......…

V. குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிட முன்வருவோம்

அ) இங்கு கோதையர்கள் என்று குறிப்பிடப்படுபவர்கள் யார்?

……………………………………………………………………………………………

ஆ) இங்கு இடம்பெற்றுள்ள உவமையணியினை இனங் கண்டு விளக்குக.

……………………………………………………………………………………………

(5 X 4= 20 புள்ளிகள்)

**02. கீழ்க்காணும் உரைப்பகுதியை அல்லது செய்யுட் பகுதியை வாசித்துத் தரப்பெற்ற வினாக்களுக்கு விடை தருக.**

உரிமைக்கும் கடமைக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வை நீக்குவதற்காக இயற்கை அமைத்த ஓர் அருமையான பாதுகாப்பே அன்பு எனப்படுவது. அன்பு எங்கே உயர்ந்து விளங்குகின்றதோ, அங்கே உரிமைப் போராட்டம் இல்லை. கடமைக் குறைவு இல்லை. அதனால் ''அன்பின் வழியது உயிர் நிலை'' என்கின்றார் திருவள்ளுவர். அன்பு இல்லாத வாழ்க்கை பாலைநிலத்தில் உள்ள பட்டமரம் போன்றது என்றும் கூறுகின்றார். அதனால் குடும்பத்தில் அன்பு ஆட்சி செய்ய வேண்டும் என்று முன்னோர்கள் ஏற்படுத்தினார்கள். இல் வாழ்க்கையை ஓர் அறம் என்று சிறப்பித்து இல்லறம் என்றார்கள். மக்கட்பேறு, சுற்றம் தழுவுதல் முதலியவற்றை அதன் அங்கம் ஆக்கினார்கள். தேசபக்தி என்று அமைந்த அன்பு அப்படியே நாடு என்ற பெரிய குடும்பத்தைப் போற்றி வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும். சமயம் அல்லது கடவுள் நெறி என்பதும் உலகத்தில் வாழும் எல்லோரிடமும் செலுத்தி, உலகத்தையே கடவுளின் குடும்பம் என்று கருதும் பரந்த நோக்கத்தை வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும்.

ஆனால் குடும்பத்தில் தாய் செலுத்தும் அன்பைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு தந்தையோ மக்களோ தன்னலம் உடையவர்களாய் தீமை செய்வார்களானால் என்ன ஆகும்?. அப்படித்தான், நாட்டின் ஒரு சாராரின் அன்பைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு மற்றொருசாரார் தன்னலமாக வாழ்வார்களானால் அன்பு வரண்டு போகும். உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம் ஏற்படும்.

1. இல்லறத்தின் அங்கங்களாகக் குறிப்பிடப்படுபவை எவை?

…………………………………………………………………………………………….
…………………………………………………………………………………………….
…………………………………………………………………………………………….
…………………………………………………………………………………………..

2. அன்புவற்றிப் போகும் சந்தர்ப்பத்தில் ஏற்படும் விளைவு யாது?

…………………………………………………………………………………………….
…………………………………………………………………………………………….
…………………………………………………………………………………………….
…………………………………………………………………………………………..
…………………………………………………………………………………………….

3. இங்கு அன்பு பற்றிக் குறிப்பிடப்படுபவை எவை?

…………………………………………………………………………………………….
…………………………………………………………………………………………….
…………………………………………………………………………………………….
…………………………………………………………………………………………….
…………………………………………………………………………………………….

4. அன்பு வரண்டு போகும் சந்தர்ப்பங்களாக இங்கு குறிப்பிடப்படுபவை எவை?

.........................................................................................................

.........................................................................................................

.........................................................................................................

.........................................................................................................

.........................................................................................................

.........................................................................................................

(4+4+6+6+=20 புள்ளிகள்)

**அல்லது**

தேன்நுகர் வண்டு மதுதனை உண்டு
தியங்கியே கிடந்ததைக் கண்டு
தான்அதைச் சம்பு வின்கனி என்று
தடங்கையில் எடுத்துமுன் பார்த்தாள்
வான்உறு மதியம் வந்ததுஎன்று எண்ணி
மலர்க்கரம் குவியுமென்று அஞ்சிப்
போனது வண்டோ பறந்ததோ பழந்தான்
புதுமையோ இது எனப் புகன்றாள்.

01. சம்புவின் கனி யாது?

...

02. வண்டின் செயல்களாகக் குறிப்பிடப்படுபவை எவை?

...

03. இங்கு பெண்ணினது அழகின் வெளிப்பாடுகளாகக் குறிப்பிடப்படுபவை எவை?

04. "வான்உறு மதியம் வந்தது என்று எண்ணி, மலர்க்கரம் குவியுமென்று அஞ்சி" இவ் அடியின் நயத்தினை விளக்குக.

(4+4+6+6+=20 புள்ளிகள்)



kalvi.lk

பகுதி - II

**கவனிக்க:**

- **1ஆம் வினாவுக்கும், ஏனைய 2,3,4,5 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடையளிக்குக.**
- **இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு விடை எழுதும் தாளைப் பயன்படுத்துக.**

**01. பின்வரும் கவிதையை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள தொடர்களின் / வழிகாட்டற் குறிப்புகளின் அடிப்படையில் கவிதையை நயந்து குறைந்த பட்சம் 200 சொற்களில் எழுதுக.**

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழா அது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான் துழந்தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே

(அ) இக்கவிதை எழுந்த பின்னணி
(ஆ) தலைவியின் அழகு
(இ) புளிக்குழம்பு செய்யப்பட்ட முறை
(ஈ) கணவன், மனைவி இருவருக்கும் இடையேயான அந்நியோன்யம்
(உ) அணிச்சிறப்புகள் (5x 6=30 புள்ளிகள்)

**02. பத்தி எழுத்துக்களில்,**
அ) மென்மை வன்மையினும் சிறப்புடையது
ஆ) கன்ஃபூஷியஸின் மென்மை பற்றிய பார்வை என்பன வெளிப்படும் முறையை விளக்குக.

**03. நலம் புனைந்து உரைத்தல் என்ற அதிகாரத்தில்,**
தலைவன், தலைவியின் நலங்களை வியக்கும் பாங்கினை விளக்குக. (15 புள்ளிகள்)

**04. கிட்கிந்தைப் படலத்தினை அடிப்படையாகக் கொண்டு,**
அ) வானர மகளிரின் தோற்றம்
ஆ) தாரை பற்றிய வர்ணனை வெளிப்படும் முறையினை விளக்குக. (15 புள்ளிகள்)

**05. எலியம் என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு,**
அ) கதையில் இழையோடும் நகைச்சுவைப்பாங்குகள்
ஆ) எலிகளை ஒழிப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள்
இவற்றினைத் தொகுத்துக் கூறுக. (15 புள்ளிகள்)


kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457